**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 31/2024, 43/2024 & 56/2024 - PW-9**

| | |
|---|---|
| Name | திரு.ஜனார்தனன் |
| Husband/Father Name | நாராயணசாமி |
| Village /Area | சென்னை |
| Taluk | சென்னை |
| Occupation | கிராம நிர்வாக அலுவலர் ஓய்வு |
| Age | 68 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 13.03.2026.

**(எதிரிகள் 1,3,4,5,8,9,10 ஆஜர். எதிரிகள் 2,6,7 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் மோசூர் கிராம நிர்வாக அலுவலராக 2015ம் ஆண்டு பணியாற்றி வந்தேன். 19.05.2015 அன்று மாலை சுமார் 5 மணியளவில் நானும் எனது உதவியாளர் கிருஷ்ணன் என்பவரும் மோசூர் செல்லும் போது மோசூர் ரயில்வே கேட் அருகில் அரக்கோணம் நகர காவல் ஆய்வாளர் மோகன் என்பவரின் கொலை வழக்கு சம்மந்தமாக டேனியல் மற்றும் சரத் என்பவர்களை கைது செய்து விசாரணை செய்து கொண்டிருக்கிறோம், அப்போது எங்களை உடன் இருக்குமாறு கேட்டு கொண்டதன் பேரில் நாங்கள் உடன் இருந்தோம். அப்போது டேனியல், சரத் என்பவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள். அவர்கள் எந்த விதமான வற்புறுத்தலுமின்றி எங்கள் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தனர். அப்போது டேனியல் ராஜ் என்பவரிடமிருந்து Yamaha இருசக்கர வாகனம் மற்றும் ஒரு கத்தியை கைப்பற்றனர். சரத் என்பவரிடம் ஒரு கத்தியும் அவரகள் சம்பவத்தின் போது அணிந்திருந்த ஆடைகளை கைப்பற்றினர். எதிரி டேனியல் மற்றும் சரத் என்பவரிடம பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகஜரிலும் நானும் எனது உதவியாளர் கிருஷ்ணன் என்பவரும் கையொப்பம் செய்தோம்.

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி டேனியலின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம்

காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுளிலுள்ள 1வது கையொப்பங்கள் என்னுடையது தான். அவைகள் முறையே **அ.த.சா.ஆ.10 மற்றும் அ.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி சரத்தின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதன் தொடர்ச்சியாக புளியமங்கலம் ரயில்வே கேட் அருகே எங்களை அழைத்து வந்தார்கள். அங்கு முஹம்மது ஆசிப், குதிரை சுரேஷ் ஆகியோரை கைது செய்து அவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டது. முஹம்மது ஆசிப்பிடம் Activa two wheeler கைப்பற்றப்பட்டது. எதிரி சுரேஷ் என்பவரிடம் சம்பவத்துக்கு பயன்படுத்திய ஆடைகள் கைப்பற்றப்பட்டது. மேற்படி எதிரிகளிடம் பெறப்பட்ட வாக்குமூலத்திலும் கைப்பற்றப்பட்ட கைப்பற்றுதல் மகஜரிலும் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள்.

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி முஹம்மது ஆசிப்பிடமிடமிருந்து கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனம் மற்றும் இரத்த கறை படிந்த துணிகளை என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. அந்த கைப்பற்றுதல் மகஜர்களிலுள்ள 1வது கையொப்பங்கள் என்னுடையது தான். அவைகள் முறையே **அ.த.சா.ஆ.14 மற்றும் அ.த.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறன.

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி சுரேஷின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதன் தொடர்ச்சியாக அரக்கோணம் ரயில் நிலையம் ஆஞ்சநேயர் கோயில் அருகில் சீனிவாசன், விக்கி என்ற இருவரிடம் போலீசார் விசாரணை செய்தார்கள். அவர்களிடம் வாக்குமூலமும் அவர்கள் சம்பவத்துக்கு பயன்படுத்திய ஆடைகளும் எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டன. மேற்படி எதிரிகளிடம் பெறப்பட்ட வாக்குமூலத்திலும் கைப்பற்றப்பட்ட கைப்பற்றுதல் மகஜரிலும் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள்.

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி சீனிவாசனின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி விக்கியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது

**அ.த.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் வழக்கு சொத்துக்கள் தான் மேற்படி எதிரிகளான டேனியல், சரத், முஹம்மது ஆசிப், குதிரை சுரேஷ், சீனிவாசன், விக்கி ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட வழக்கு சொத்துக்கள் ஆகும். அவைகள் முறையே **சா.பொ.1 முதல் சா.பொ.8** வரை குறியீடு செய்யப்படுகிறது.

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

<u>**எதிரிகள் 1 முதல் 10 தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

தற்போது நான் பணி ஓய்வில் உள்ளேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளில் சரத் குமார் யார் என்று என்னால் தற்போது அடையாளம் காண்பிக்க முடியுமா என்றால் முடியாது.

என்னிடம் காண்பிக்கப்பட்ட வழக்கு சொத்துக்கள் யார் யாரிடமிருந்து கைபப்பற்றப்பட்டவை என்று தனி தனியே என்னால் கூற முடியாது.

நான் குறிபிட்ட மேற்படி எதிரிகள் நீதிமன்றத்தில் இன்று ஆஜராகியுள்ள எதிரிகளா என்று அடையாளம் காண்பிக்க முடியுமா என்றால் முடியாது.

வழக்கு சொத்துக்களில் எந்த எந்த எதிரி வைத்திருந்தார் என்று என்னால் கூற முடியாது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்படி எதிரிகள் என்ன என்ன விவரங்கள் கூறினார்கள் என்று நான் முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான்.

நான் பணியில் இருந்த போது எனக்கு அலுவலக ரீதியாக தகவல் அனுப்பப்பட்டதா என்றால் இல்லை நான் அழைத்ததன் பேரில் தான் சென்றேன்.

ஏற்கனவே எனக்கு வழக்கு சம்பவம் பற்றி தெரியும் என்று சொன்னால் சரிதான். நான் கிராம நிர்வாக அலுவராக இருந்ததால் அரசு அதிகாரிகளுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான்.

ஏற்கனவே நான் ராணிப்பேட்டை நீதிமன்றத்தில் வேறொரு எதிரிக்கு சாட்சியம் அளித்தது தற்போது நியாபகம் உள்ளதா என்றால் நியாபகம் இல்லை. அந்த வழக்கில் நான் பிறழ் சாட்சியாக மாறிவிட்டேன் என்று சொன்னால் அதை பற்ற எனக்கு தெரியாது.

இந்த வழக்கில் நான் கையொப்பங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் கையொப்பம் இட்டேன் என்று சொன்னால் சரியல்ல. SC.No.09/2021 என்ற வழக்கில் நான் காவல் நிலையத்தில் கையொப்பம் அளித்தேன் என்று சொன்னால் அது குறித்து எனக்கு நியாபகம் இல்லை.

நான் போலிசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறு விசாரணை :**</u> **இல்லை.**

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.13 18:08:57 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.